செய்தி வெளியீடு எண். 418 நாள் 10.11.2006

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில்**

**தமிழ்நாடு அரசுக்கும் சாம்சங்க் நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தம்.**

2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 – ஆம் தேதி தமிழக அரசுக்கும் சாம்சங்க் இந்தியா எலக்ட்ரானிக்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கும்- இந்நிறுவனம் தமிழகத்தில், சிறப்பு பொருளாதார மண்டலத்திட்டம் மற்றும் உள்நாட்டு விற்பனைப் பகுதித் திட்டம் ஆகிய இரண்டு உற்பத்தித் தொழிற்சாலைகளைத் தொடங்குவது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் கையெழுத்தானது. அவ்வமயம் மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில் நுட்ப அமைச்சர் மாண்புமிகு தயாநிதி மாறன் உடனிருந்தார்.

2. சாம்சங்க் நிறுவனக் குழுமம் தென்கொரியாவில் முதலிடத்திலிலுள்ள வர்த்தக நிறுவனமாகும். சாம்சங்க் நிறுவன குழுமத்தின் முன்னணி நிறுவனமான சாம்சங்க் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், செமிகண்டக்டர், தொலைத் தொடர்பு, டிஜிடல் மீடியா, டிஜிடல் ஒருங்கிணைப்புத் தொழில்நுட்பம் போன்றவற்றில் உலக அளவில் புகழ்பெற்ற நிறுவனங்களில் ஒன்றாகும். சாம்சங்க் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் 2005 ஆம் ஆண்டில் 56.7 பில்லியன் அமெரிக்க டாலருக்கு (ரூபாய். 255,000 கோடி)

விற்றுமுதல் செய்து 7.5 பில்லியன் அமெரிக்க டாலருக்கு (ரூபாய். 34,000 கோடி) நிகர லாபம் ஈட்டியுள்ளது. மிகவேகமாக வளர்ந்துவரும் வர்த்தக அமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ள சாம்சங் எலக்ட்ரானிக்ஸ், வண்ண மானிடர்கள் வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள், நினைவுப்பதிவுச் சில்லுகள் மற்றும் டி.எப்.டி – எல். சி. டி. போன்றவற்றை உலகிலேயே அதிக அளவு உற்பத்தி செய்யும் நிறுவனமாகும். 2005 – ஆம் ஆண்டு நிறுவன புகழ் (Brand Equity) கணக்குப்படி, சாம்சங் உலக அளவில் 20–வது இடத்தில் வரிசையிடப்பட்டுள்ளது. 2005 – ஆம் ஆண்டு தகவல் தொழில் நுட்ப புகழின் கணக்குப்படி, சாம்சங் உலக அளவில் 7–வது இடத்தில் வரிசையிடப்பட்டுள்ளது.

இந்தியாவில் சாம்சங் நிறுவனம் புதுதில்லிக்கருகில் உள்ள நோய்டா என்ற இடத்தில், பலவிதமான நுகர்வோர் மின்னணுச் சாதனங்களை–அதாவது தட்டை வடிவிலான (flat) மற்றும் LCD வண்ண தொலைக் காட்சிப் பெட்டிகள், குளிர்சாதனப் பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங்கள், மற்றும் கணினி மானிட்டர்கள் போன்ற வீட்டு உபயோகப்பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது.

சாம்சங் நிறுவனம் தனது உற்பத்தி மையத்தை இந்தியாவில் அமைப்பது குறித்து பல்வேறு மாநிலங்களை விரிவாக ஆராய்ந்தது. தமிழக அரசின் உத்வேகம் ஊட்டும் அணுகுமுறை, தரமான மனிதவளம், சிறந்த சாலைவசதி, நம்பகமான சரக்கு போக்குவரத்து சேவை மற்றும் மிகச்சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய காரணங்கள் சாம்சங் நிறுவனத்தை தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஈர்த்துள்ளது.

சாம்சங்க் நிறுவனம் திருப்பெரும்புதூரில் தொடங்கவுள்ள தொழிற்சாலைகள் 2007 மத்தியில் தனது உற்பத்தியைத் தொடங்கும்.

சாம்சங்க் நிறுவனம், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்சாதன பெட்டிகள், ஏர்கண்டிஷனர்கள், துணி துவைக்கும் இயந்திரங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் உள்நாட்டு விற்பனைப் பகுதித் திட்டம் ஒன்றை ரூ. 284 கோடி முதலீட்டில் தொடங்கவுள்ளது. மேலும் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டம் ஒன்றை ரூ 166 கோடி முதலீட்டில் அமைத்து அதன் மூலம் கம்ப்யூட்டர் மானிட்டர்கள் (L.C.D. மானிட்டர்கள் உட்பட) கம்ப்யூட்டர் பிரிண்டர்கள் மற்றும் பிற தொழில் நுட்ப சாதங்களை தயாரிக்கவுள்ளது. ஆக மொத்தம் சாம்சங்க் நிறுவனம் இந்த இரண்டு திட்டங்களிலும் சேர்த்து ரூ. 450 கோடி முதலீடு செய்யவுள்ளது.

சாம்சங்க் நிறுவனம், திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் 50 ஏக்கர் பரப்பளவில் தனது உள்நாட்டு விற்பனைப்பகுதித் திட்டத்தைத் தொடங்கவுள்ளது. அதைப்போல திருப்பெரும்புதூர் சிப்காட் தொழிற்பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள உயர் தொழில் நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் 30 ஏக்கர் பரப்பளவில் சாம்சங்க் நிறுவனத்தின் சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டம் அமையவுள்ளது. சுாம்சங்க் நிறுவனத்திற்கு உள்ளீட்டு பொருள்கள் வழங்கும் நிறுவனங்கள் (Vendors) பலரும் இத்திட்டத்தால் கவரப்பட்டு தங்களது தொழிற்சாலைகளை திருப்பெரும்புதூர் சிப்காட் சிறப்புப் பொருளாதார மண்டலம் மற்றும் சிப்காட் தொழிற்பூங்காவில் அமைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டங்கள் மூலமாக சுமார் 2500

பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும் 1500 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் கிட்டும். இத்திட்டத்தின் மூலம் எலக்ட்ரானிக்ஸ் வன்பொருள் உற்பத்திக்கு தமிழகத்தில் மேலும் ஊக்கம் கிடைக்கும் என்றும் தமிழகத்தில் கொரிய நாட்டு முதலீடு மேலும் அதிகரிக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பாக தொழிற்துறைச் செயலாளர் திரு சக்திகாந்த தாஸ், இ.ஆ.ப., அவர்களும் சாம்சங்க் நிறுவனத்தின் சார்பாக அந்நிறுவனத்தின் தென் மேற்கு ஆசிய மண்டல தலைமையிடத் தலைவரும், தலைமை நிர்வாக அலுவலருமான திரு எஸ். எச். ஒ அவர்களும் கையொப்பமிட்டனர். இந்த புரிந்துணர்வு ஒப்பந்த நிகழ்ச்சியில் சாம்சங்க் நிறுவனத்தின் மூத்த அதிகாரிகளான திருவாளர்கள் டபிள்யூ. ட்டி. யாங்க் (இயக்குநர் மற்றும் தலைமை நிதி அதிகாரி), ஆர். சுட்ஷி (துணை நிர்வாக இயக்குநர்), ஒய்.பி.யூ (இயக்குநர் உற்பத்தி) மற்றும் சுனில் கோயல் (துணை செயல் தலைவர் – நிதி) ஆகியோரும் தமிழக அரசின் தலைமை செயலாளர், திரு எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தகவல் தொழில் நுட்பத் துறைச் செயலாளர் திரு சந்திரமௌலி, இ.ஆ.ப., ஆகியோரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை 9

**PRESS RELEASE No.418** **10.11.2006**

# PRESS RELEASE
# Memorandum of Understanding between Government of Tamil Nadu and Samsung on 10th November 2006

## In presence of Hon'ble Chief Minister Kalaignar

-----

A memorandum of understanding (MoU) for setting up of two new projects, one as a SEZ unit and another for the Domestic Tariff Area, was signed today (10th November 2006) between Government of Tamil Nadu and Samsung in the presence of Hon'ble Chief Minister Kalaignar. Hon'ble Union Minister for Communications and Information Technology, Thiru. Dayanidhi Maran, was also present on the occasion.

SAMSUNG Group is the #1 business group in South Korea. Samsung Electronics Co. Ltd. (SEC), flagship company of the Samsung Group, is a global leader in semiconductor, telecommunication, digital media and digital convergence technologies. Samsung Electronics Company's sales was US$56.7 billion and net income of US$7.5 billion in the year 2005. Recognized as one of the fastest growing brands, Samsung Electronics is the world's largest producer of colour monitors, colour TVs, memory chips and TFT-LCDs. Globally, SEC is ranked 20th in terms of brand equity in 2005. In terms of IT brands in 2005, SEC was ranked 7th globally.

Samsung India Electronics has manufacturing facilities at Noida near New Delhi making a variety of consumer electronic products, viz., color televisions – flat and LCD, refrigerators, washing machines and computer monitors.

Samsung had extensively studied various States in India for setting up their manufacturing base. Proactive approach of the State Government, quality of manpower, good connectivity, reliable logistics and excellent infrastructure have been key factors in attracting Samsung to Tamil Nadu. Samsung's projects in Sriperumbudur would be operational by mid 2007.

Samsung will be investing about Rs 284 crores in a Domestic Tariff Area (DTA) project to manufacture Color TVs, refrigerators, air-conditioners and washing machines. Samsung will also set up a Special Economic Zone (SEZ) unit for manufacture of Computer Monitors (including LCD Monitors), Computer Printers and other Technology Products with an investment of Rs 166 crores. Samsung will thus be investing in total Rs. 450 crores in both these projects together.

Samsung will be setting up the DTA project in 50 acres of land in the SIPCOT Sriperumbudur Industrial Park, while the SEZ Unit will come up in 30 acres of land in the Sriperumbudur Hi-Tech Special Economic Zone located within the SIPCOT Sriperumbudur Industrial Park. The project is also expected to attract several component vendors of Samsung to set up projects in the SIPCOT Sriperumbudur SEZ and Industrial Park. The project would provide direct employment to 2,500 persons and indirectly provide employment to about 1,500 persons. This project is expected to give a further boost to electronics hardware manufacturing as well as Korean investments in Tamil Nadu.

The MoU was signed today by Mr Shakti Kanta Das, I.A.S., Secretary to Government, Industries Department, on behalf of the Government of Tamil Nadu and by Mr S H Oh, President & CEO , Samsung South West Asia Regional HQ, on behalf of Samsung. Other senior executives of Samsung India Electronics who attended the MoU signing ceremony include Mr W T Yang, Director & CFO, Mr R. Zutshi, Dy. Managing Director, Mr Y B Yoo, Director, Manufacturing and Mr Sunil Goel, Executive Vice President, Finance. Chief Secretary to the Government of Tamil Nadu Mr. L.K. Tripathy IAS, Finance Secretary Mr. K. Gnanadesikan IAS and Secretary, Information Technology, Mr. Chandramouli IAS were also present.

Issued by The Director of Information and Public Relations, Chennai